செ.வெ.எண்: 320 நாள்: 14.05.2020

**கும்பகோணம் தாராசுரம் மார்க்கெட்டுக்கு பதிலாக தற்காலிகமாக வலையப்பேட்டையில் அமைக்கப்பட்டுள்ள காய்கறி மார்க்கெட்டினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் நேரில் பார்வையிட்டார்**

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தாராசுரம் மார்க்கெட்டுக்கு பதிலாக தற்காலிகமாக வலையப்பேட்டையில் அமைக்கப்பட்டுள்ள காய்கறி மார்க்கெட்டினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் இன்று(14.05.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

வலையப்பேட்டை தற்காலிக காய்கறி மார்க்கெட்டை ஆய்வு செய்த பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

தஞ்சாவூர் மாவட்டத்தில் கொரோனா நோய்த்தொற்று பரவாமல் தடுப்பதற்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள 8 சோதனைச் சாவடிகளில் பிற மாவட்டங்களிலிருந்து வாகனங்களில் வருபவர்களுக்கு அங்கேயே மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டு, அறிகுறி இருக்கும்பட்சத்தில் பெரியார் மணியம்மை கல்லூரியில் தனிமைப்படுத்தப்பட்டு வருகின்றனர்.

கும்பகோணம் தாராசுரம் மார்க்கெட்டிற்கு உத்தரபிரதேசத்திலிருந்து வந்த ஒரு வாகன ஓட்டுனருக்கு கொரோனா அறிகுறி கண்டறியப்பட்டதால், தாராசுரம் காய்கறி மார்க்கெட் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. தாராசுரம் காய்கறி மார்க்கெட் தொடர்புடைய 300 நபர்களுக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அவர்களில் 50 சதவீத பேருக்கு சிகிச்சை முடிவு வரப்பெற்று, கொரோனா நோய்த்தொற்று இல்லையென உறுதி செய்யப்பட்டுள்ளது. மீதி நபர்களுக்கு பரிசோதனை முடிவு வரவேண்டியுள்ளது.

தாராசுரம் காய்கறி மார்க்கெட்டில் கடை நடத்தி வருபவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில், வலையப்பேட்டையில் தற்காலிகமாக காய்கறி மார்க்கெட் அமைக்கப்பட்டுள்ளது. தாராசுரம் மார்க்கெட் தொடர்புடையவர்களுக்கு நோய்த்தொற்று இல்லையென உறுதி செய்யப்பட்டால், மீண்டும் திறப்பது பற்றி ஆலோசித்து முடிவெடுக்கப்படும்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் இதுவரை 71 நபர்களுக்கு கொரோனா நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டு, அவர்களில் 55 நபர்கள் சிகிச்சை பெற்று குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். மீதமுள்ள 16 நபர்களும் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நல்ல நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்திக்கான மருந்து, மாத்திரை மற்றும் உணவு வழங்கப்பட்டு வருகிறது. கொரோனா நோய் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளான முகக்கவசம் அணிதல், கைகழுவுதல், சமூக இடைவெளி கடைப்பிடித்தல் ஆகியவற்றை பொதுமக்கள் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும். தங்களின் பகுதிகளுக்கு வெளி மாநிலங்கள் மற்றும் வெளி மாவட்டங்களிலிருந்து வருபவர்கள் குறித்து அரசு அலுவலர்களிடமோ அல்லது 1077 என்ற எண்ணிலோ பொதுமக்கள் தகவல் தெரிவிக்கலாம்.

இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

பின்னர், தாராசுரம் அரசுப்பள்ளியில் பள்ளிக்கல்வித்துறை ஆசிரியர்கள் சார்பில் பள்ளி மாணவர்களின் குடும்பத்தினருக்கு நிவாரண உதவிகளை வழங்கி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது :-

தஞ்சாவூர் மாவட்டத்தில் பணிபுரியும் அரசு ஆசிரியர்கள் மற்றும் பள்ளிக்கல்வித்துறை பணியாளர்கள் சுமார் 3000 பேர் சார்பில் அவர்களது பள்ளிகளில் படிக்கும் 15,000 மாணவர்களின் குடும்பத்தினருக்கு ரூபாய் 25 லட்சம் மதிப்பீட்டில் தலா 5 கிலோ அரிசி மற்றும் மளிகை பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து 21 நாட்கள் எந்தவொரு புதிய நோய்த்தொற்றும் ஏற்படாத பட்சத்தில், தஞ்சாவூர் மாவட்டம் பச்சை மண்டல பகுதியாக அறிவிக்கப்படும். கொரோனா தடுப்புப் பணிகளை மேற்கொள்ளும் மாவட்ட நிர்வாகத்திற்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். அத்தியாவசியத் தேவைகளுக்காக வீட்டிலிருந்து வெளியே வரும்போது பொதுமக்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள வண்ண அடையாள அட்டையை கண்டிப்பாக எடுத்து வர வேண்டும். பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வை நடத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளின்போது, கும்பகோணம் வருவாய்க் கோட்ட அலுவலர் திரு.வீராசாமி, முதன்மை கல்வி அலுவலர் திரு.இராமகிருட்டிணன், கும்பகோணம் வட்டாட்சியர் திரு.பாலசுப்ரமணியன் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.